**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 212 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW : 3

| Name | ஈஸ்வரன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | குருநாதன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : -**

1) நான் லட்சுமியாபுரத்தில் வசித்து வருகிறேன் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 13.12.2012ம் தேதி சுமார் மதியம் 2 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். போலீசார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் வரைந்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : -**

1) போலீசார்கள் என்னிடத்தில் கையெழுத்து எதுவும் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் ஆடுகள் காணாமல் போன விபரங்கள் இருந்தது. திருடு போனதாக சொல்லப்படும் ஆடுகள் யாருக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கையெழுத்து செய்த சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் சுந்தர்ராஜ் என்பவர் இருந்தார். என்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையெழுத்து இருக்கிறதா என்றால் இல்லை. எதிரிகளுக்கும்இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னாலும் அ.சா.1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : -**

3ம் எதிரி தரப்பில்செய்த குறுக்கு விசாரணையை 2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது-

**மறு விசாரணை : - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு